பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (20-2-66) இதழ் 12

விசுவாவசு மாசி 9 ஷவ்வால் பிறை 28 ஞாயிற்றுக்கிழமை

யார் அதிஷ்டசாலி?
சில
ரொபின் நீல சோப்பினுள்
வெள்ளித்தகடும், செப்புத்தகடும்
வைக்கப்பட்டிருக்கிறது!
வெள்ளித்தகட்டை பெறுபவருக்கு
ரூபா 500-00 - ம்
செப்புத்தகட்டை பெறுபவருக்கு
ரூபா 250-00 - ம்
பரிசாக வழங்கப்படும்.
இது காஞ இன்டஸ்றீஸாரின் தயாரிப்பு
வடமாகாண ஏஜன்டுகள்:
ஏ. எஸ். சங்கரப்பிள்ளை & பிறதர்
யாழ்ப்பாணம்

# தமிழ்ப் பகுதி மீனவர் கஷ்டம்

## அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை

## தமிழரசுக் குழு இன்று ஆராயும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள மீனவர்களின் நிலைபற்றியும் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் அமைக்கப்பட்டதனால் வடக்கு, கிழக்கு மாகாண மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள்பற்றியும் ஆராய்ந்த தமிழரசுக்கட்சியின் உபகுழு தனது அறிக்கையை தமிழரசுக்கட்சியின் மேலிடத்திற்குச் சமர்ப்பித்துள்ளது. இன்று கொழும்பில் கூடும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு இந்த அறிக்கையைப் பரிசீலிக்கவிருக்கிறது. இதன்பின் இதுபற்றி அரசாங்கத்துடன் தமிழரசுத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரியவருகிறது.

தமிழ்ப்பகுதிகளில் மீன்பிடித்துறைகள் அமைப்பது பற்றியும் அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பேச்சு நடத்துவர் எனத் தெரிகிறது.

இன்று கொழும்பில்கூடும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு தமிழ்ப்பகுதிகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதென்ற யோசனைபற்றியும் ஆராயுமெனத் தெரிகிறது.

## பிரதமர் டட்லி இன்று அமெரிக்கா செல்கிறார்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்று அமெரிக்காவுக்குப் பயணமாகிறார். அவர் வைத்திய பரிசோதனைக்காகவே அமெரிக்கா செல்கிறாரென பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வால்டறீட் வைத்திய ஆஸ்பத்திரியில் தங்கி பிரதமர் சிகிச்சை பெற்றுக்கொள்வாரெனத்தெரியவருகிறது.

இச்சமயத்தில் இரு நாடுகளுக்குமிடையே ஏற்படக்கூடிய நெருங்கிய தொடர்புகள் குறித்தும் பிரதமர் அங்கு பேச்சுவார்த்தை நடாத்துவாரென அறியப்படுகிறது.

பிரதமர் இங்கு திரும்பி வரும்வரைக்கும் ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன மந்திரிசபையில் தற்காலிக தலைவராகக் கடமையாற்றுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் அமெரிக்க விஜயம் முற்றிலும் தனிப்பட்டமுறையிலானதென்று அமெரிக்க செய்தியொன்று தெரிவித்துள்ளது.

டாக்டர்களின் தீர்மானத்தைப் பொறுத்தே பிரதமர் அங்கு எவ்வளவு நாட்கள் தங்குவாரென்பது பற்றி முடிவுசெய்வாரென அறியப்படுகிறது.

சுகததாசா கொலை முயற்சி

## சந்தேகநபர்கள் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்படுவர்

பம்பலப்பிட்டி, சனி

தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவை கொலை செய்ய சதி செய்ததாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் புதன்கிழமை ஆஜர் செய்யப்படுவார்கள்.

அன்றைய தினம் இவர்களுக்கு எதிராக, பொலிஸார் எவ்வித சாட்சியங்களுமளிக்க மாட்டார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை நடத்திய இரகசிய பொலிஸார் தாங்கள் சேகரித்த விபரங்களை அட்டொர்னி ஜெனரல் திரு. விக்டர்தென்னக்கோன் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வழக்கு சம்மந்தமாக உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜோன் அட்டிகலை தலைமையிலுள்ள பொலிஸ் கோஷ்டி அட்டொர்னி ஜெனரல் தலைமையிலுள்ள முடிக்குரிய வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசிப்பார்கள்.

கடந்த கொழும்பு மாநகரசபை தேர்தலில் புளுமென்டால் வட்டாரத்தில் சமசமாஜ கட்சிசார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவராக கூறப்படும் டாக்டர் சி எஸ். பெரேரா, சியாநெரிஸ்அப்புகாமி எஸ். கருணரத்தின ஆகிய மூவரும், சதி சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

இவ் வழக்கு சம்பந்தமாக திரு. வி. ஏ சுகததாசாவின் சில அரசியல் எதிரிகளும், தொழிற் சங்க வாதிகளும், பொலிஸரால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

## பி. ஓ. ஏ. ஸி. குவண்டாஸ் விமான சேவை நிபுணர்கள் இலங்கை வருகிறார்கள்

பம்பலப்பிட்டி, சனி

பி. ஓ. ஏ ஸி. குவண்டாஸ் விமானக் கம்பெனிகளைச் சேர்ந்த நிபுணர் குழுக்கள் இலங்கை வரவிருக்கின்றன.

பி. ஓ ஏ. ஸி. யைச் சேர்ந்த நிபுணர்களும், குவாண்டாஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த 3 நிபுணர்களும் அதிலிருப்பார்கள்'

1962-ம் ஆண்டுமுதல் லண்டன்—கொழும்பு—சிங்கப்பூர் பாதையில் ஏர் சிலோன்ஸ் ஸ்தாபனம், மேற்கண்ட இரு விமானக் கம்பெனிகளுடன் கூட்டாக சேவை நடத்திவந்தது. பி ஓ ஏ. ஸி. யைச்சேர்ந்த 'வி ஸி 10' விமானத்தை ஏர்சிலோன் இதற்காகப் பயன் படுத்திவருகிறது.

1964-ம் ஆண்டுக்கு முதல் பி. ஓ ஏ. ஸி, குவண்டாய் ஸ்தாபனங்களின் ஏஜெண்டாகவும் ஏர் சிலோன் கடமையாற்றிவருகிறது.

"இங்குவரும் மேற்கண்ட இரு ஸ்தாபனங்களின் நிபுணர்களும், ஏர்சிலோன் அதிகாரிகளுடன் விமான சேவைபற்றி ஆலோசிப்பார்கள்.

## இலங்கை — இந்திய வர்த்தகம் விஸ்தரிப்பு

புதுடில்லி பெ. 19

இலங்கையும் இந்தியாவும் இந்த ஆண்டில் தங்கள் வர்த்தகத்தை விஸ்தரிக்க இலங்கியிருக்கின்றன.

இன்று புதுடில்லியில் கையெழுத்தான ஒப்பந்தப்படி மொத்தம் 7 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் விஸ்தரிக்கப்படும்.

கருவாடு, புளி முதலியவற்றை இலங்கை இறக்குமதிசெய்யும் இந்தியாவில் இருந்து டயர்களை இறக்குமதி செய்யவும் இலங்கை விருப்பம் தெரிவித்திருக்கிறது.

இலங்கையிலிருந்து தேங்காய் எண்ணெ, ரப்பர், ஆகியவற்றை இந்தியா இறக்குமதிசெய்யும்.

லண்டன், பெப். 19

பிரிட்டிஷ் றோயல் கடற்படைக்குப் பொறுப்பான மந்திரி திரு. கிறிஸ்டோபர் மெத்யூ ராஜினாமா செய்துவிட்டார். பிரிட்டிஷ் பாதுகாப்பு கொள்கை அபாயமானதும், தவறானதுமாய் இருப்பதால் தாம் ராஜினாமா செய்வதாய் அவர் கூறினார்.

## "பிரேத அடக்கத்தை நான் தடுத்திருந்தேன்"

### இளவாலை கொலை வழக்கில் கிராம சேவகர் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

"பிரேத அடக்கத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது நான் அவ்விடம் சென்று, காலஞ்சென்றவரின் மரணம் சம்பந்தமாக எனக்குச் சந்தேகம் எழுந்திருப்பதால் பொலிஸ் வந்து விசாரணை செய்யும்வரை பிரேத அடக்கத்திற்கான ஏற்பாடுகளை ஒத்திவைக்கும்படி எதிரியைக் கேட்டுக்கொண்டேன்" மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இளவாலை கொலைவழக்கில் சாட்சியமளித்த பெரியவிளான் கிராமசேவகர் எஸ். சுந்தரமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கில் இளவாலையைச் சேர்ந்த வீரசக்தி கணபதிப்பிள்ளை சென்ற வருடம் அக்டோபர் மாதம் 20-ம் திகதி தனது மனைவியான சங்குபதியைக்கொலை செய்ததாக சங்கானைப் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானார். சங்கானைப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் வழக்கை நடத்தினார்.

கிராமசேவகர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "சென்றவருடம் அக்டோபர் மாதம்

(6-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

எம். தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் ஓய்வுபெற்ற மாவட்ட பிரதம வித்தியாதரிசியும், இராசம்மாவின் அருமைக்கணவரும், ரி. கதிரவேற்பிள்ளை (பிரதம சிறுப்பர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), ரி. சிவஞானம் (அரசாங்க கொந்தருத்துக்காரர்) சரஸ்வதி, ரி. திருவாதவூரர் (விற்பனவு அதிகாரி, வாக்கர்ஸ் ஸ்தாபனம், கொழும்பு), ரி. விவேகானந்தராஜா, ரி சிவதாஸன் ஆகியோரின் தந்தையும், கமலாம்பிகை, காலஞ்சென்ற பொன்னம்பலம், மணி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (20-ம்திகதி) ஞாயிற்றுக்கிழமை சுதுமலை மேற்கிலுள்ள இல்லத்திலிருந்து மாலை 2 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஜாதியும், தீண்டாமையும் ஒழியாதவரை இந்து மதம் எவர் உள்ளத்திலும் புனிதத் தன்மையை ஏற்படுத்தாது. —மகாத்மா காந்தி.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 3?

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி 9உ (2)-2-66)

# நாமும் வெளிநாட்டு உதவியும்

இலங்கைக்கு, அமெரிக்கா மீண்டும் பொருளாதார உதவி அளிக்க ஆரம்பித்துள்ளது. பொருளாதாரம் சீர்குலைந்தும்' வாழ்க்கைச்செலவு அதிகரித்தும் இலங்கை மக்களும் அரசாங்கமும் கஷ்டமுறும் இச்சமயத்தில் அமெரிக்கா மீண்டும் உதவியளிக்க முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். இன்று பிரதமர் டட்லி அமெரிக்காவுக்குப் பிரயாணமாகிறார். சிகிச்சை பெறுவதுடன் அமெரிக்கத் தலைவர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார். இலங்கையின் பொருளாதாரக்கஷ்டத்தை நீக்குவதற்கு அமெரிக்காவிடமிருந்து அவர்மேலும் உதவிகோரக்கூடும். பிரதமர் பூரணகுணமடைவதோடு, அவரது முயற்சிகளும் பூரண வெற்றியளிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்போம்.

இலங்கைக்கு பிரிட்டனும் கடன் வழங்கியிருக்கிறது. சோஷலிஸநாடுகளிடமிருந்தும் கடன்வாங்குவதற்கு முயற்சிசெய்யப்படுகிறது. தேசிய அரசாங்கம் மட்டுமல்ல முன்னர் ஆட்சிப்பீடத்திலிருந்த கூட்டரசாங்கமும் வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறது. இக்கடன்கள் பெரும்பாலும் வட்டியுடன் திருப்பிகொடுக்கப்பட வேண்டியன.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து நிதி உதவியும் கடனும் வாங்க வேண்டியது அவசியமாக இருப்பினும் இக்கடன்களைச் செலுத்தவேண்டியதற்கான அவசியம் பற்றியும் அரசாங்கம் சிந்தனை செய்யவேண்டியது அவசியம்

இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகவும், உடை மற்றும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகவும் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி, மாவு, துணி, கருவாடு ஆகியவைகளைவெளிநாட்டு உதவிகளாகப் பெறுவதன்மூலம் நமது நாட்டுப் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது. நம் நாட்டிலுள்ள மூலவளங்களைப்பயன்படுத்தி நமது உற்பத்தியைப்பெருக்குவதன்மூலமே இப்பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாண முடியும். உற்பத்தியான பொருள்களை வெளிநாடுகளிலிருந்துஉதவியாகவோ கடனாகவோ பெறுவதைவிட நம்நாட்டில் உற்பத்தியைப்பெருக்குவதற்கான திட்டங்களை வகுத்த அதற்கு வெளிநாட்டு உதவிகளையும் பயன்படுத்த வேண்டும். நம்நாட்டில் உற்பத்தியை பெருக்கினால்தான் நாம் வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பிக்கொடுக்க முடியும் நமது நாட்டில் மூலவளமும், ஆள் பலமும் நிறைய இருக்கின்றன இதைச் சரியான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். முன்னைய வருடங்களில் சில இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் பெருந்தொகையானவை செலவிடப்படவில்லை யென்று ஓர் அறிக்கை கூறுகிறது. ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் எப்படியாவது செலவிடத்தான் வேண்டுமென்பதில்லை. என்றாலும் நாட்டின் அபிவிருத்திக்குச் சீர்திருத்தத்துக்கும் பணம் தேவையாக இருக்கையில் நிதி ஒதுக்கப்படும் அது சரிவரப் பயன்படுத்தப்படாமலிருந்தால் அதைப் பற்றி அந்தந்த இலாகாவுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் ஆராய்ந்து நடவடிக்கைஎடுக்கவேண்டும். வெளிநாடுகளிலிருந்து உதவியாகவும் கடனாகவும் வாங்கும் பணத்தை நமது நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தத்தவறினால் அதைவிடப்பெரியதவறு வேறு இருக்கமுடியாது.

அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து அதைச் சரிவர நிறைவேற்றினால் தான் வாங்கும் கடனுக்குரிய வட்டியைச் செலுத்தவும் உதவிக்குப் பிரதியுபகாரம் செய்யவும் முடியும் இல்லையேல், ''கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்று கம்பர் வர்ணித்த நிலையை நாம் நிதர்சனமாக்க வேண்டி வரும். இதற்கு இடம் கொடுக்காமல் வெளிநாடுகளிலிருந்து பெறும் உதவியையும் கடன்களையும் நம் நாட்டிலுள்ள மூலவளங்களையும் ஆள்பலத்தையும் பயன் படுத்தி நாடு சகல துறைகளிலும் தன்னிறைவு பெறக் கூடிய வகையில் உபயோகப் படுத்த வேண்டும். இதற்கேற்றவகையில் நமது அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டும். பிரதமர் டட்லி அமெரிக்கத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொழுது இன்றைய உணவு உடைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கூடிய உதவியைப் பெறுவதோடலாமல் அபிவிருத்தித் திட்டங்களுக்கேற்ற உதவியைப் பெற முயற்சி செய்யவேண்டும்.

## இந்திரா கெய்ரோ செல்வார்

கெய்ரோ, பெப். 19

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஐ. அ. கு. அதிபர் நாஸருடன் 'முக்கிய பேச்சுக்கள்' நடத்தும் பொருட்டு கெய்ரோ செல்லவிருக்கின்றார். திகதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

(பி. டி. ஸி)

## போதனாசிரியர் இடமாற்றம்

வவனியா, சனி

கொழும்பு விவசாயவிள் தரிப்பு அலுவலகத்தில் பிரதம விவசாயப் போதனாசிரியர் திரு. சி. தவராஜ்வேல் இம்மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள மாவட்ட விவசாய அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

# யூகோஸ்லேவிய அரசியல் அமைப்பில் மாவட்டங்கள்

யூகோஸ்லாவியா அரசியல் சட்டஷரத்துப் பிரகாரம் மாவட்ட அமைப்பே நிலைக்களனான அரசியல் அமைப்பாய் உள்ளது, இங்குதான் பிரஜைகள் தங்கள் உரிமைகளையும், செல்வாக்குகளையும், சுயநிர்ணய அரசுரிமையும் இஃதுபோன்றஏனைய அமைப்புக்கள் மூலமாகப் பிரயோகித்துஇந்தமாவட்ட அமைப்பின் கொள்கைகளையும், பொதுவாக வாழும் சமுதாயத்தையும் கூட நிர்மாணிக்கின்றனர்.

அரசியல் மற்றும் ஏனைய சட்டத்தின் கீழும், ஒவ்வொருதனிப்பட்டமாவட்ட அமைப்பும், அதனுடைய உரிமைகள், கடமைகள், ஏனைய அமைப்புக்களுடன் உள்ள ஈடுபாடு, இதன் அதிகாரத்திற்கு உட்பட்டவேறு அமைப்புக்கள், ஏனைய மாவட்ட மக்களின் அமைப்புக்களின் உரிமைகள், தகுதிகள் ஆகியன பற்றிய விதிமுறைகள் இத்தியாதியாகியனபற்றி மாவட்ட அமைப்பே குறுக்கீடின்றி சுதந்திரமாக அமைக்கின்றன. இதுபோலவே இதன் விதிமுறைகள் இதன் வருங்கால வளர்ச்சிக்கான விபரங்கள், ஏனைய மாவட்ட மக்கள் அமைப்புக்களுடனும் இதன் கூட்டுச் சேர்க்கையின் பங்கு ஆகியன சம்பந்தமாகவும் விபரிக்கின்றன.

எல்லா இன விதிமுறைகளும், ஒரே அரசியல் சட்டக்கோட்பாட்டினை நிலைக்களனாகக் கொண்டிருந்தாலும், ஒவ்வொன்றும் எந்தக் குறிக்கோளுடன் பிரதிபலிக்க பிரத்தியோகமாக உருவாக்கப்பட்ட மாவட்ட அமைப்போ அந்த நோக்கத்திற்கேற்ப அதன் பொருளாதார சமூக வளர்ச்சியின் அடிப்படை அமையும். சுருங்கக்கூறுவதாயின், உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கேற்பமாவட்ட அமைப்பின் குணநிசயம் அடங்கியிருக்கும். இதனால்தான் அனேகவிடயங்கள், அனேகமாக வேறுபாடாகவே தீர்மானிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, சில மாவட்ட அமைப்புக்களின் விதிமுறைகள் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனையவைகள் விவசாயம், கலைகள், கனிச் சுரங்கம், உல்லாசப் பிரயாண வர்த்தகம் ஆயனவற்றின் வளர்ச்சிகளில் முக்கியத்துவம் காட்டுவனவாக அமைந்துள்ளன.

இன்றேல் ஓர் உதாரணமாக, நிலைக்களனாக கல்வி கற்கும் உரிமை, சுகாதாரப் பாதுகாப்பு ஆகிவனவற்றைப் பிரஜைகளுக்கு அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டதிற்குமேலாக விரிவுபடுத்தத் தேவையான வார்ப்படங்களைத் தயாரித்தல் ஆகிய முன்னேற்றங்களை விநியோகிக்கும்.

ஓர் வளர்ச்சியற்ற மாவட்ட அமைப்பினைப் போன்ற கல்வி வசதிகள், பிள்ளைகளைப் பராமரித்தல் ஆகியனவற்றைப் பிரஜைகளுக்கு ஒரே தரமுடையதாக வழங்கமாட்டாது.

மாவட்ட அமைப்பு விதிமுறைகள் ஆக்கும்பொழுது விசேஷ கவனம், சுயநிர்ணய அரசு விஷயமாகவும் பிரஜைகளுக்கான நெருங்கிய தொடர்பு சம்பந்தமாகவும் செலுத்தப்பட்டு அவர்கள் மானசீகமாக மாவட்ட அமைப்புக்களில் சிரத்தையூட்ட முயற்சிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

# பூமி மெதுவாகச் சுற்றுவதன் காரணம் என்ன?

— புலவர் சி. சின்னையா —

[பூமி மெதுவாக சுற்றுகிறதென்றும் அதற்கான காரணம் தெரியவில்லையென்றும் ரஷ்ய வான சாத்திரநிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்கான காரணத்தை யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவர் ஆறு வருடங்களுக்கு முன்பே வெளியிட்டுள்ளார். 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பிலிருந்து வெளியான 'தமிழின்பம்' இதழில் புலவர் சி சின்னையா எழுதியுள்ள கட்டுரையொன்றில் பூமி மெதுவாக சுற்றும் காரணத்தைவிளக்கமாக வெளியிட்டுள்ளார். அக்கட்டுரையையும் இங்கு பிரசுரிக்கின்றோம் ]

பூமி மெதுவாகச் சுற்றுகிறது என்ற தலைப்பில் ரஷ்ய வானசாத்திர நிபுணர் ஒருவர் வெளியிட்ட கருத்துப் பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப் பெற்றுள்ளது.

ஏன் பூமி 24 மணிநேரத்தில் தன்னைத்தான் சுற்றுகிறது?

மற்றைய செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய மண்டலங்களும் 24 மணிநேரத்திற்குள் சுற்றுகின்றனவா?

இல்லை.

அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு கால அளவையிலேயே தங்களைச் சுற்றுகின்றன.

ஏன்?

ஒவ்வொரு மண்டலங்களும் தனித்தனி வெவ்வேறு பரிமாணத்தையும் நிறையையுங் கொண்டிருப்பதுவே காரணமாகும்.

இந்த நியதியின்படி பூமியினுடைய நிறைக்கேற்ப அது 24 மணிநேரத்திலேயே தன்னைத்தான் சுற்ற வேண்டும்.

இது பூமி உற்பத்தியான காலந்தொட்டு நிகழ்ந்து வருகின்ற நிகழ்ச்சி.

தற்போது விஞ்ஞான மேதைகளால் அனுப்பப் பெறுகின்ற வானவெளிக் கப்பல்கள் பூமியினுடைய ஈர்ப்புச்சக்தி எல்லையைக் கடந்து அப்பாற் சென்றமையால் பூமியின் நிறை சிறிதளவு குறைவுற்றது

அதனால் அதற்கேற்ற காலஅளவு கூடுதலடையும்.

இதுவே பூமியின் சுற்றும் வேகம் சிறிதளவு குறைவுற்றமைக்குக் காரணமாகும்.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாத 'தமிழின்பம்' இதழில் பூமியின் சுழல் வேகம் குறைகிறதா? என்ற தலைப்பில் புலவர் சி. சின்னையா எழுதிய கட்டுரை கீழே தரப்பட்டுள்ளது.

வானவெளியில் இந்தப் பூமண்டலத்தைவிட எத்தனையோ ஆயிரம்மண்டலங்கள இயங்கிக் கொண்டிருக்கின்றன

அவைகள்ஒவ்வொருசூரிய மண்டலத்தையும் சார்ந்த சூரியமண்டலத்தின் கவர்ச்சிச் சக்திக்குட்பட்டு அவ்வவற்றின் நிறைக்கு ஏற்ற வகையில் தன்னைத்தானே சுற்றிக் கொண்டும், தாம் சார்ந்துள்ள சூரியமண்டலத்தைச் சுற்றிக்கொண்டும் ஒவ்வொரு சூரியமண்டலமும் அந்தச் சூரியமண்டலத்தைச் சார்ந்துள்ள மண்டலங்களும் விநாடி ஒன்றுக்கு அநேக ஆயிரம் மைல்தூரம் பரந்த வானவெளியில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு மண்டலமும் தன்னைத்தான் சுற்றுகின்ற காலவரையறை அதனதன் நிறை (கனம்) யைப்பொறுத்

(6-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

'பூமி பந்துபோல் என்று பாடசாலையில் ஆரும் வகுப்பிலேயே வாத்தியார் சொல்லித் தந்திருக்கிறார். பூமியைப் பந்துபோன்ற உருவமுடையது என்று வர்ணிக்க முடியாது என்று பிரிட்டிஷ் ரோயல் வானசாஸ்திரச் சங்கம் தெரிவித்திருக்கிறது. பொதுவாக எல்லோரும் நினைப்பதுபோல, பூமி இரு துருவப்பகுதிகளிலும் சற்று தட்டையாகவும் நடுநிலைக் கோட்டுப் பகுதியில்மட்டும் விரிந்தும் பந்துபோலஇல்லை. புடைப்புக்களும், பள்ளங்களும் பல்வேறு பகுதிகளிலும் உண்டு. அதனால் பூமியைப் பந்துபோன்ற உருவமுடையது என்று வர்ணிக்க முடியாது'' என்று அந்தச் சங்கம் கூறுகிறது.

பூமி பந்துபோல உருண்டை வடிவமானது என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுவதற்காக ஒருவாத்தியார் தமது உருண்டையான பொடிடப்பியை உதாரணத்துக்குக் காட்டுவதுண்டாம். ஒருநாள் பாடசாலைக்கு பரிசோதகர் (இன்ஸ்பெக்டர்) வந்தாராம். அன்று அவர் அந்த ஆசிரியரின் வகுப்பு மாணவர்களின் திறமையைப் பரிசோதிப்பதற்காக 'பூமி எப்படியிருக்கும்?' என்று கேட்டாராம். பிள்ளைகள் 'விழிக்கவே' இன்ஸ்பெக்டரின் பின்னால் நின்ற வாத்தியார் தமது பொடி டப்பியை எடுத்துக் காட்டினாராம். விசேஷ தினங்களில் பூமி தட்டையாகவும் மற்றும் நேரங்களில் உருண்டையாகவும் இருக்கும் என்று ஒரு புத்திசாலி மாணவன் பதிலளித்தானும். அன்று, இன்ஸ்பெக்டர் வருவாரெனத் தெரிந்த வாத்தியார். தாம் விசேட தினங்களில் உபயோகிக்கும் தட்டையான வெள்ளிப பொடிடப்பியைக் கொண்டு வந்திருந்தது இதற்குக் காரணம். இது சின்ன வயதில் படித்த ஒரு கதை.

ஃ ஃ ஃ

இப்பொழுது பாடசாலைகளுக்குப் பரிசோதகர்கள் அடிக்கடி வந்து மாணவர்களினதும் திறமையையும் தகுதியையும் பரிசோதிக்கிறார்களா? அந்தமுறை இன்னும் இருந்தால் நம்நாட்டில் கல்வியின்தரம் இவ்வளவு மோசமாக இருக்குமா? தரம் குறைவதற்கு ஆசிரியர்மீது பழிசுமத்தும் கல்வி இலாகா, இதுபற்றியும் சிந்தித்தால் நல்லது!

ஃ ஃ ஃ

பிரதமர் டட்லி இன்று அமெரிக்காவுக்கும்பிரயாணமாகிறார். வைத்திய சிகிச்சை பெற்றுத் திடகாத்திரத்துடன் அவர் திரும்பவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை பழைய டட்லி அல்ல. உள்ளத்திலுறுதியும் எதிர்க்கட்சியின் சொல்லம்புகளுக்கு ஈடுகொடுத்துத் திருப்பியடிக்கும் வன்மையும் அவரிடம் இப்பொழுது உண்டு. உடல் நிலையும் சீராகிவிட்டால் இந்நாடடு மக்களுக்குக் கவலையே குறைந்து விடும்.

அமெரிக்கா செல்வதென்றுபிரதமர்திடீரென்று தான் தீர்மானித்தாரா? பர்மிய அதிபர் ஜெனரல் நீவின் இங்குவந்து திரும்பியதும் பிரதமர் அமெரிக்கா செல்வார் என்ற திடீர்த் தகவல் வெளியானது ஏன்? சர்வதேச விவகாரங்களில் திடீர் மாறுதல் ஏதும் ஏற்படக் கூடுமா?

— ஊர்சுற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஆபத்தை நேருவுக்குமுன்னர் இந்திரா அறிந்திருந்தாராம்

## கெய்ரோ பத்திரிகை பேட்டியில் இந்தியப் பிரதமர் தகவல்

கெய்ரோ, பெப். 19

**1954-ம் ஆண்டு தமது தந்தை நேருஜியுடன் தாம் கம்யூனிஸ்ட் சீனாவுக்குச் சென்றிருந்த பொழுது சீனாவின் ஆபத்து பற்றி உணர்ந்திருந்ததாக இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

கெய்ரோவிலிருந்து வெளியாகும் 'அல்அஹரம்' என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு அளித்த பேட்டியில தான் திருமதி இந்திராகாந்தி மேற்கண்ட விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

''நானும் எனது தந்தையும் கம்யூனிஸ்ட் சீனாவுக்குச் சென்றிருந்தபொழுது சீனத் தலைவர்கள்நடந்து கொண்ட விதம் அவர்களின் உண்மையான எண்ணத்தை புலப்படுத்தியிருந்தது. அவர்களினால் எமக்கு அபாயம் இருக்கும் என்பதை நான் உணர்ந்திருந்தேன். இதுபற்றிஎனது தந்தையிடமும் சொல்லியிருந்தேன். ஆனால் ஒருவருடத்தின்பின்னர்தான் எனது தந்தை இதை உணர்ந்தார். வெளியிலும் சொன்னார்'' என்றும் திருமதி இந்திராகாந்தி தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## 7 பேர்தான் மாண்டனர்

மாஸ்கோ, பெப். 19

மாஸ்கோ விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் ரஷ்ய விமானம் விபத்துக்குளானதில் 6 பிராணிகளும் ஒரு விமானியுமே கொல்லப்பட்டதாக 'டாஸ்' அறிவிக்கிறது.

இந்த விமான விபத்தில் 50 பேர் உயிரிழந்ததாகமுன்னர் வெளியான ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்திருந்தன.

## 91 வியட்காங்கியர் மாண்டனர்

சைகோன், பெப். 19

தென்வியட்னாமில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் 91 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். வியட்காங்கியரின் வெடி மருந்துச்சாலை ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

லண்டன், பெப். 19

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் திங்கட்கிழமை மாஸ்கோவுக்கு விஜயம் செய்வார். அங்கு அவர் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்!

## ரஷ்யாவின் அணு ஆயுத வலிமை

### அமெரிக்காவை மிஞ்சிவிட்டார்களாம்

மாஸ்கோ, செப். 19

அணு ஆயுதப்போட்டியில் அமெரிக்காவைத் தாம் மிஞ்சிவிட்டதாக சோவியத்யூனியன் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் பத்திரிகையொன்றில் மார்ஷல் மலினேவ்ஸ்கியின் கட்டுரை வெளியாகியிருக்கிறது. இந்தக் கட்டுரையில் அவர் ரஷ்யாவின் அணு ஆயுத வலிமையை வர்ணித்துள்ளார்.

''அணு ஆயுத உற்பத்தில் அமெரிக்காவிலும் பார்க்க ரஷ்யா பலமடங்கு முன்னேறிவிட்டது. பலநோக்கு ஏவுகருவிகளை உற்பத்தி செய்வதிலும் ரஷ்யா சாதனை நிலைநாட்டியிருக்கிறது'' என்றும் மார்ஷல் மலினேவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான்

## படை விலக்கல் 6 நாளில்பூர்த்திபெறும்?

### யு தாண்ட் நம்பிக்கை

நியூயோர்க், பெப். 19

**1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்திய - பாகிஸ்தான் சண்டையின் போது கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து துருப்புகள் வாபஸ் பெறுவது இன்னும் ஏழு நாட்களுக்குள் (பெப்ரவரி 25 க்குள்) பூர்த்திபெறும் என்று ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசி யுதாண்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

காலம் சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பதூகர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுப் செய்து கொண்ட டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் படி, சண்டையின் போது கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து இரு நாட்டுப் படைகளும் இம் மாதம் 25-ம் திகதிக்குள் முற்றாக விலகவேண்டும்.

இதுபற்றி ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசி யுதாண்ட் நேற்று கருத்து வெளியிடுகையில்; இந்திய - பாகிஸ்தான் படைவிலக்கல் இரு நாட்டு இராணுவத் தளபதிகளும் செய்து கொண்ட முடிவிற்கிணங்க திட்டமிட்டபடி, தடங்கல் எதுவுமின்றி நடைபெறுகிறதென்றும் இம் மாதம் 25-ம் திகதிக்குள் இருநாட்டு படைகளும் முற்றாக வாபஸ் பெற்றுவிடுவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

படைவிலக்கலின் போது அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாதது குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகும் என்றும் யுதாண்ட் கூறியுள்ளார்.

'தாய்நாட்டு சேவையை

## மங்கையர் இன்று மறந்துவிட்டனர்'

வவனியா, சனி

'சைவத்தையும், தமிழையும் பேச்சளவில் வளர்த்து விட முடியாது. உண்மையாக உழைப்பதன்மூலமே இவற்றை வளர்க்கலாம். நமது பண்பாட்டையும் பேணிக்காக்க இதுபோன்ற முயற்சி தேவை.'

இவ்வாறு நாகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெற்ற சைவமங்கையர் கழக முதலாவது ஆண்டுவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய தென்மராட்சி இசைக்கலை மன்றத் தலைவர் திரு. கே. இராமச்சந்திரன் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பண்டைய காலத்தில் சைவமங்கையர் தமது கணவருடன் தோளோடு தோள் கொடுத்து விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் முன்நின்றார்கள். ஆனால் இப்போது போலி நாகரிகத்தில் மயக்கமுற்று தமது தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் செய்ய வேண்டிய சேவைகளை மறந்துவிடுகின்றனர்.

இவ்வித நிலைமாறி நமது மங்கையர் நாட்டின் முன்னேற்றத்துக்காக அயராது உழைக்க வேண்டும். பண்பாட்டைப் பேணிக் காப்பாற்றுவதில் அவர்கள் அக்கறை காட்ட வேண்டும். சைவசமயத்தவர்களுக்கு ஒரு தனியான மண்டபம் இலங்கையில் இல்லாதிருப்பது பெரும் குறையாகஇருக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய சைவப் பிரமுகர்கள் முன்வர வேண்டும்.

## கி ச. தலைவர் மீது நம்பிக்கையில்லை?

அச்சுவேலி, சனி

அச்சுவேலி கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி மீது சபை நம்பிக்கை இழந்துவிட்டதால் அவரைத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒரு விசேஷ கூட்டத்தைக் கூட்டும்படி மேற்படி சபையின் முதலாம் வட்டார அங்கத்தவரைத் தவிர்ந்த ஏனைய பன்னிரு அங்கத்தவர்கள் எழுத்து மூலம் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுக்கொண்டனர்.

இதற்கிணங்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். சி. மாணிக்கவாசகர் சபையின் விசேஷ கூட்டம் ஒன்று இம்மாதம் இருபத்தைந்தாம்திகதி சபைமண்டபத்தில் நடைபெற இருப்பதாகவும் மேலும் இது சம்பந்தப்பட்ட விடயங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமெனவும் அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு வழங்கப்பட்ட கடனுதவி நிபந்தனையற்றது

### டீன் ரஸ்க் விளக்கம்

வாஷிங்டன், பெப். 19

அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஹம்பரி அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்ததைத் தொடர்ந்து இந்தியாவுக்கு வழங்கப்பட்ட அமெரிக்காவின் 10 கோடி டாலர் உதவி, நிபந்தனையற்ற கடனுதவி என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்ரஸ்க் தெரிவித்துள்ளார்.

''இந்த உதவி எவ்வித நிபந்தனையுடனும் வழங்கப்படவில்லை. இந்தியாவின் பொருளாதாரம் இந்திய— பாகிஸ்தான் சண்டை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டது, அமெரிக்காவின் உதவி நிறுத்தப்பட்டது அதன் தொழில் வளர்ச்சிக்கு ஒரு வீழ்ச்சியாகவிருந்தது. இதனைக்கருத்திற்கொண்டே இந்தியாவுக்கு இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது'' என்றும் டீன் ரஸ்க் தெரிவித்துள்ளார்.

**வியட்னும் நெருக்கடி**

திரு. டீன ரஸ்க் நேற்று வியட்னும் நெருக்கடிபற்றி கருத்து வெளியிடுகையில்; உத்தேச அமைதி மகாநாட்டில் வியட்காங்கியர் கலந்து கொள்வதுபற்றி அமெரிக்காவுக்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது என்றுதெரிவித்தார்.

வியட்னும் நெருக்கடி சம்பந்தமான மகாநாட்டில் கலந்துகொள்வதென்று வடக்கு வியட்னும் முடிவு செய்தால் அம்மகாநாட்டுக்கு வியட்காங்கியரை அழைக்கலாம் என்றும் கூறிய திரு. டீன்ரஸ்க் தென்வியட்னுமின் ஏகபோக பிரதிநிதி என்ற முறையில் வியட்காங்கியா அம்மகாநாட்டில் கலந்துகொள்வதை அமெரிக்கா அனுமதிக்காது என்றும் தெரிவித்தார்.

## மலருக்குப் பெயர் சாஸ்திரி

மாஸ்கோ, பெப். 19

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் நினைவாக இங்குள்ள ஒரு கிராமத்தில்அதிகமாகக் காணப்படும்ஒருவிதமலருக்கு சாஸ்திரியின் நாமம் சூட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் வெளியிட்ட செய்தியொன்றில்; இப்படியான மலர்கள் கருங்கடலுக்கருகிலும் இந்தியா, கொரியா, பல்கேரியா ஆகிய நாடுகளிலும் காணப்படுகிறதென்று தெரிவித்துள்ளது.

புதுடில்லி

## விமான விபத்தில் ஒருவர் மாண்டார்

புதுடில்லி, பெப். 19

கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லி விமான நிலையத்தில் இந்திய 'கரவல்' விமானம் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஒரு என்ஜினியர் நேற்றுக் காலமானர்.

## ரூபா 35,000 அபேஸ்!

ஹட்டன், சனி

ஹட்டனிலுள்ள எஸ். ஏ. ஹாசிம்பாயின் கடையில் உள்ள இரும்புப்பெட்டியிலிருந்து 35,000 ரூபாவை திருடர் கோஷ்டியொன்று கொள்ளையடித்துச் சென்றுவிட்டது. இருப்புப்பெட்டிலிருந்த இரு கைக்கடிகாரங்களையும், அக்கோஷ்டி எடுத்துச்சென்றுவிட்டது

ஹட்டன்பொலிஸார் இக்கொள்ளைசம்பந்தமாக புலன் விசாரணை செய்துவருகின்றூர்கள். இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## தேர்த் திருப்பணி வேலைகள்

அச்சுவேலி, சனி

அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார்கோவில் தேர்த் திருப்பணிக்காக நாள்மரம் தறிக்கப்பட்டு துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. கோப்பாய்த் தொகுதிக் காரியாதிகாரி நா. வேதாரணிய சேயோன் இவ்வைபவத்தில்பங்குபற்றி ஊக்கம் தெரிவித்தார். கோவில் குருக்கள் பூர்வாங்கக் கிரியைகளை நடாத்தி வைத்தார்.

## மின்சார வசதி

அச்சுவேலி, சனி

அச்சுவேலி கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி வட்டார அங்கத்தவர் ஆகியோரின் நன்முயற்சியால் அச்சுவேலி பிரதான வீதி மின்சார வெளிச்சங்களால் சிவராத்திரியன்று தொடக்கம் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி - சங்கரத்தை

# பஸ் சேவை சீர்கேடு; வாக்குறுதி நிறைவேற்றப்பட வில்லை?

யாழ்ப்பாணம், ஞாயிறு

நவாலி-சங்கரத்தை பஸ் பிரயாணிகள் சங்கம் 4 மாதங்களுக்கு முன் வடபிரதேச உதவி முகாமையாளரைப் பேட்டிகண்டபோது பஸ் சேவை அபிவிருத்தி பற்றி அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இதனால் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும், உத்தியோகஸ்தர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பேட்டிகண்டசமயம் வடபிரதேச முகாமையாளர், ஒருமாத காலத்துக்குள் பஸ் சேவையைச் சீர்திருத்துவதாகவும் இரண்டு பஸ்களுக்குப் பதிலாக மூன்று பஸ்களைச் சேவைக்கு விடுவதாகவும், பொன்னாலை வரை இரண்டு பஸ்களைச் சேவைக்கு விடுவதாகவும், மற்ற பஸ்ஸைக் காரைநகர் வரை சேவைக்கு விடுவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார்,

இதுவரை காலமும் வாக்குறுதி நிறைவேற்றப்படாததோடு வடபிரதேச உதவி முகாமையாளர் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளார் கடந்த நான்கு மாதங்களாக பொதுமக்கள் பஸ்சேவைச் சீர்கேட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இப்பாதையில் தற்பொழுது சேவைக்கு விடப்பட்டுள்ள இரு பஸ்களும் சில நாட்களில் பழுதடைந்துவிடுகின்றன. இதன் காரணமாகப் பாடசாலை மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவாலி-சங்கரத்தை பஸ் பிரயாணிகள் சங்கக் காரியதரிசி திரு. என். இரத்தினசிங்கம் இதுபற்றித் தெரிவிக்கையில் தாம் இவ்விஷயமாகப் பலதடவை இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் தொடர்பு கொண்டும் இதுவரை வாக்குறுதி பேச்சளவில் தான் இருக்கிறதெனக் கூறினர்.

# சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் திடீரென விழுந்து மரணம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூன்று குழந்தைகளுக்கு தந்தையான கல்லூரி அதிபர் ஒருவர் சயிக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது மயங்கிவிழுந்து மரணமான சம்பமொன்று யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ளது.

புன்னாலைக் கட்டுவன் ஆங்கில பாடசாலை அதிபர் முருகேசு குமாரசுந்தரத்தின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் மனைவி நேசரத்தினம் சாட்சியமளித்தபோது கூறியதாவது;-

காலஞ்சென்றவர் கடந்த 3 வருடங்களாக இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பாடசாலைக்கு அவர் காரில் செல்வது வழக்கம். அன்றையதினம் பாடசாலையால் வந்து சயிக்கிலில் யாழ்ப்பாணம் சென்றார்.

ஆனந்த நடராசா சிவானந்தன் சாட்சியளிக்கும் போது கூறியதாவது:

காலஞ்சென்றவருக்கு பின்னால் தான் வேறொரு சயிக்கிலில் சென்றுகொண்டிருந்ததாகவும், விக்டோறியா வீதியில் அவர் மயங்கி விழுந்ததாகவும், உடனடியாக டாக்டர் ஏ. ஜீவரத்தினம் பரிசோதனை செய்ததாகவும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதும் மரணமானதாகவும் கூறினர்.

டாக்டர் எஸ். திருலோகநாதனும் சாட்சியமளித்தார். இயற்கை மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# 17,000 ரூபாய் மோசடி

பொலிசார் விசாரிக்கின்றனர்

பம்பலப்பிட்டி, சனி

தேயிலை கட்டுப்பாடு இலாகாவில் சுமார் 17,000 ரூபா மோசடியொன்றை இரகசிய பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே இந்த இலாகாவை சேர்ந்த இரு இலிதர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# நீக்ரோ இளைஞர்க்கு மரண தண்டனை

மெம்பிஸ், (ரென்னஸி)
பெப். 19

14 வயதுள்ள ஒரு ஐரோப்பிய பெண்ணின் மீது பலாத்காரம் பிரயோகித்த குற்றத்துக்காக 18 முதல 27 வயதுள்ள ஐந்து நீக்கிரோ இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

(பி. டி. ஸி.)

# கிராமச்சபை தலைவர் தெரிவு

வவனியா, வெள்ளி

மாந்தை வடக்கு (அடம்பன்)கிராமசபையின் தலைவர் தெரிவு நேற்று காலை வவனியா-மன்னார் மாவட்ட உள்ளூர் ஆட்சி ஆணையாளர் திரு. க. நல்லைநாதன் தலைமையில் அடம்பன் கிராம சபை மண்டபத்தில் நடைபெற்றது

போட்டியின்போது திரு. சவுரிமணியானுக்கு 8 வாக்குகளும், திரு. அந்தோனிமுத்து சூசைக்கு 6 வாக்குகளும் கிடைத்ததைத் தொடர்ந்து திரு. சவுரிமணியால் புதிய கிராம சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஒரு அங்கத்தவர் கூட்டத்துக்கு சமூகம் கொடுக்கவில்லை.

சினிமா விமர்சனம்

# என்னதான் முடிவு?

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் ஏதோ ஒருவகையில் தவறு புரிந்துகொண்டுதான் இருக்கின்றான். தான் செய்வது தவறு என்பது தெரிந்தும்கூட மற்றவனுக்கு தீங்கு இழைக்கும் ஒருவன் தனக்குக் கிடைக்கவிருக்கும் தண்டனையைப்பற்றிச் சிந்திப்பதுமில்லை. பொருட்படுத்துவதுமில்லை. ஆனால் தனது தவறை உணர்ந்து, வருந்தி, திருந்தும்பொழுது... மனிதனாகவே அவன் மாறிவிடுகின்றான்.

பழம்பெரும் நடிகர் டி. எஸ் பாலையா, வி. கே. ராமசாமி, ராஜன், அஞ்சலிதேவி, வசந்தி ஆகியோரை முக்கிய கதாப்பாத்திரங்களாக வைத்து உருவாகியிருக்கும், என்னதான் முடிவு நல்ல கதையுள்ள ஒரு தமிழ்ப்படம் வெளிவராதா என்று ஏங்கிய சினிமா ரசிகர்களுக்குக் கருத்துள்ள பொக்கிஷமாக அமைந்திருக்கிறது.

கதை இதுதான்: தனது வாழ்க்கையில் மறந்துகூட பொய் சொல்ல விரும்பாத குமரன், (ராஜன்) அண்ணனின் தவறான எண்ணத்தினால் வீட்டைவிட்டு வெளியேறி வெளியூர் செல்லமுற்பட்டு ஓசியில் ரயிலில் செல்லும்போது, ஒரு குபேர எஜமானின் (வி. கே ராமசாமி) உயிரைக் காப்பாற்றுகின்றான். சந்தர்ப்பம் அவனை வாழ்வளித்துவிடுகிறது. அவரின் அன்பைப் பெற்றுக்கொண்ட அவன் குபேர வாழ்வு வாழத் தொடங்குகின்றான். இதனை ஒருசூழ்ச்சி என்று கருதுகின்றனர் அந்த எஜமானின் உதவியாளரும், (கண்ணன்) மனேஜரும் (டி. எஸ். பாலையா). அவர்கள் விரித்த வஞ்சக வலை, அவரின் உயிரையே கொண்டு போகிறது. சந்தர்ப்பம் குமரனைப் பழிவாங்குகிறது. குமரன் சிறையில் அடைக்கப்படுகின்றான். பல வருடங்களின் பின்னர் அவன் வெளியே வந்தபோது அந்த மனேஜரைக் காணத் துடிக்கின்றான். பழிக்குப்பழி வாங்க ஆசைப்படுகிறான். யாரைப் பார்க்க வேண்டும். யாரை பழிக்குப் பழி தீர்க்க வேண்டும் என்று அவன் கருதினனோ... அவர், தனது அண்ணாவுக்கும் அருமைத் தங்கைக்கும் வாழ்வளித்த பெரும் உத்தமராக இருக்கின்றார். இது குமரனுக்குப் புரியவில்லை. மனேஜர்தான் அந்த உத்தமர் என்பதை அவன் அறியவுமில்லை. அவனின் துடிப்பெல்லாம் அந்த மனேஜரைப் பழிவாங்குவதே.

தங்கையின் திருமணத்தின் போது மனேஜர் நேரில் வந்ததும் அவனின் இதயம் துடிக்கிறது. ஆனால் அவர்தான் அந்த உத்தமர் என்றறிந்தும் மனம் வெதும்புகின்றான். குற்றத்தை ஒப்புக்கொள்கின்றார் மனேஜர். ஆனால் அவன்...!

உருவிய கத்தியுடன் அவரைத் கறகறவென்று இழுத்துக்கொண்டு ஒரு அறைக்குள் நுழைகிறான் குமரன். அறைக் கதவு சாத்தப்படுகிறது! ஒரு சிறு சத்தம்! பின்னர் அமைதி...

இந்தக் கடைசிக் கட்டத்தில்தான், கோபால கிருஷ்ணன் தமது "சஸ்பென்ஸை" கையாளுகிறார்!

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை, வசனம், டைரக்ஷன் அருமை. சமுதாயத்தில் தவறிவிடுபவர்களுக்கு இப்படம் நல்ல படிப்பினை அளிப்பதுடன் திருந்தவும் வழி காட்டுகிறது.

பாடல்கள் மூன்று. நடனம் ஒன்றேஒன்று. ஹாஸ்யம் மருந்துக்கும் கிடையாது. நடிப்பைப் பொறுத்தவரை பாலையா உச்சக் கட்டத்தில் விளங்குகிறார்.

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தவறுசெய்யும்போதும் பின்னர் வருந்தும்போதும் அவரின் நடிப்பு...அபாரம்!

கதை எங்கே? கதைஎங்கே? என்று அலுத்துக்கொள்ளும் சினிமா ரசிகர்கள், "என்னதான் முடிவை', நம்பிப்பார்க்கலாம். தமிழ்ப்படஉலகில் இது ஒரு திருப்பம். இப்படம் யாழ்ப்பாணம் ராணி தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

—மகான்

REGAL—JAFFNA
NOW SHOWING
Todd Armstrong
Nancy Kovack
in
JASON AND THE ARGONAUTS
(Eastman-Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நாடோடி மன்னன்
தினசரி 4-15க்கு மட்டும்
சாத்தான் நெவர் சிலீப்ஸ்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
கர்ணன்

“லேடன்” LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஷ்ட்
● கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
32A, கே. கே. எஸ. ரேட், யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இதுவரை ஹாஸ்ய பாத்திரங்களில் நடித்துவந்த நாகேஷ் இப்படத்தில் கதாநாயகனாகத் தோன்றி மிகவும் அற்புதமாக நடித்திருக்கிறார்.
நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன்
எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
சர்வர் சுந்தரம்

பெட்டா பார்மஸி
உங்களுக்கு வேண்டிய
மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள், காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்
வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்
23, டாம் வீதி, கொழும்பு-12 போன் 7213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

வட்டுக்கோட்டை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு நிர்வாகக் காரியதரிசி தேவை. அவர் G. C. E. (A. L) சித்தியடைந்தவராயும், தட்டெழுத்துக் கணக்குப் பதிவியலில் தராதரம் உடையவராயும், குறைந்தது 5 வருட வியாபார அனுபவம் பெற்றவராயும் இருக்க வேண்டும். கூட்டுறவுப்பயிற்சித் தராதரமிருப்பின் விசேடமாகக் கவனிக்கப்படும். மாதச்சம்பளம் ரூபா 125/- 12 1/2 வீதம் பஞ்சப்படி கொடுக்கப்படும் சம்பள உயர்வும், கடைசிச் சம்பள உயர்வும், கடைசிச் சம்பளமும் வேலையைப் பார்த்துக் கணிக்கப்படும். பிணைப் பணம் ரூபா 1000/- தலைவர் வட்டுக்கோட்டை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வட்டுக்கோட்டை என்ற விலாசத்துக்கு 15-3-66 க்கு முன் மனுச்செய்யவும், 2016

---

வியட்னும்

## துருப்புகள் நிலைமை

சைக்கோன், பெப். 19

தென் வியட்னமில் சுமார் 2,37,000 வியட்காங்கியரும் வடக்கு வியட்னம் துருப்புகளும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்த்து 7,75,000 தென் வியட்னமியரும் மற்றும் வெளிநாட்டுத் துருப்புகளும் போரிடுகின்றனர்.

இதுபற்றி அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் தெரிவிக்கையில்; வடக்கு வியட்னமிலிருந்து தென் வியட்னமுக்கு வரும் துருப்புகளின் தொகை 4,500 ஆக அதிகரித்திருக்கின்றது என்று கூறினர்.

தெற்கில், 20,000 வடக்கு வியட்னம் துருப்புகள் இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## 'ஜாம்' செய்ய தீர்மானம்

மீசாலை, சனி

மீசாலை தெற்கு இ. வி. கழகத்தின் பொதுக்கூட்டம் நேற்றுமாலை மீசாலை தெற்கு இ. மு. சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. ந. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இவ்வருடம் மீசாலையில் ஜாம் செய்யும் கைத்தொழில் ஆரம்பிக்க வேண்டும் எனவும். மாம்பழம், பலாப்பழம் ஆகியவை இயற்கையாய் உற்பத்தியாகும் மாதங்களாகிய சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களில் இத்தொழிலில் பலரை ஈடுபடுத்த செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




கிரிக்கெட்

# சென். ஜோன்ஸ் அமோக வெற்றி!

## அதிவேகப் பந்தெறி வீரர் வைரவப்பிள்ளையின் அபார விளையாட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஒரு ஆட்டத்தினுலும், 45 ஓட்டங்களினுலும் சென் ஜோன்ஸ் கல்லூரியிடம் தோல்வியடைந்தது சென் ஜோன்ஸ் கல்லூரியின் இந்த வெற்றிக்குக் காரணகர்த்தாவான அதிவேகப் பந்தெறி வீரரான வைரவப்பிள்ளையென்றே சொல்லலாம். 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை மிகவும் வெற்றிகரமாக இவர் வீழ்த்தினுர். மற்றும் இக்கோஷ்டியில் சிறந்த வீரர்களாக ஞானகோன் அல்போன்சஸ் ஆகியோர் எதிர்க்கோஷ்டியினர் அதிக ஓட்டங்கள் எடுக்காதவகையில் அற்புதமாக விளையாடினுர்கள்.

முதல் ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் வீரர்களே துடுப்பெடுத்தாடினுர்கள். இதில் சென் பற்றிக்ஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 51 ஓட்டங்களே பெற்றன. இதில் எ. சி. ரி. கிறவுதர் 19 ஓட்டங்களையும் என். வன்னியசிங்கம் 7 ஓட்டங்களையும், வி. ஜேசுதாசன் 6 ஓட்டங்களையும் ரி. புவனேந்திரா 6 ஓட்டங்களையும், என். ஜெயரெட்னம் 5 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென் ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான வைரவப்பிள்ளை 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும், தேய்வேந்திரா 16 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும், சுகுமார் 9 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கெட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினுர்கள்.

இதையடுத்து சென். ஜோன்ஸ் தனது முதலாவது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இதில் சென் ஜோன்ஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 187 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயநாயகம் 16 ஓட்டங்களையும், சிவகுமார் 20 ஓட்டங்களையும், இராசதுரை 19 ஓட்டங்களையும், ஞானக்கோன் 35 ஓட்டங்களையும், தெய்வேந்திரா 37 ஓட்டங்களையும், சுரேந்திரா 24 ஓட்டங்களையும் துரைசிங்கம் 18 ஓட்டங்களையும் வெற்றிகரமாகப் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென் பற்றிக்ஸ் எறிபந்து வீரர்களான ஏ. பெனடிற் 50 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும். என். ஜெயரத்தினம் 46 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும், ரி. புவனேந்திரன் 25 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினுர்கள்.

இதையடுத்து சென் பற்றிக்ஸ் தனது 2வது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இத்தடவை சென் பற்றிக்ஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 91 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். குலநாதன் 17 ஓட்டங்களையும், டபிள்யு. ஏ. ஒஸ்வோல்ட் 5 ஓட்டங்களையும், என். வன்னியசிங்கம் 5 ஓட்டங்களையும், ரி புவனேந்திரா தனது விக்கெட்டை இழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென் ஜோன்ஸ் எறிபந்து வீரர்களான தெய்வேந்திரா 32 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கெட்டுகளையும், வைரவப்பிள்ளை 30 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினுர்கள்.

இப்போட்டி முடிவில் சென் ஜோன்ஸ் ஒரு ஆட்டத்தினுலும், 45 ஓட்டங்களினுலும சென் பற்றிக்ஸ் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டி சென் பற்றிக்ஸ்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

# யாழ். இந்து வெற்றி!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றகிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரியை கடுமையான போட்டியின் பின்னர் மூன்று விக்கட்டுகளாலும் ஒரு ஓட்டத்தினுலும் வெற்றியீட்டியது யாழ்.இந்துவின் எதிர்பாராதவெற்றிக்கு வீரர் சிவானந்தனே காரணகர்த்தாவாக இருந்தார்.

முதலாவது ஆட்டத்தில் இவர் 28 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 8 விக்கட்டுகளைப் பாராட்டத்தக்க விதத்தில் வெற்றிகரமாக வீழ்த்தினுர்.

முதலில் யாழ்ப்பாணக்கல்லூரிவீரர்களே துடுப்பெடுத்தாடினர் இவர்கள் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 93 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஹரிதாசன் 12 ஓட்டங்களையும் சி. ஜெயேக்க 19 ஓட்டங்களையும் ரத்தினகுமார் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதையடுத்து யாழ் இந்து தனது முதலாவது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. யாழ்.இந்து சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 118 ஓட்டங்களைப்பெற்றது இதில தர்மரத்தினம் 12 ஓட்டங்களும், சிவானந்தன 28 ஓட்டங்களும், சிவசத்தியசீலன் 13 ஓட்டங்களும் பாலேந்திரா 10 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் எறிபந்து வீரர்களான ஞானச்சந்திரன் 26 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளையும், சேதுபதி 31 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும, பிரேமநேசன் 10 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், விக்னேஸ்வரன் 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து யாழ்ப்பாணக் கல்லூரி தனது 3-வது துடுப்படி ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 138 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரேமநேசன் 25 ஓட்டங்களும், ஞானச்சந்திரன் 30 ஓட்டங்களும், சண்முகம் 20 ஓட்டங்களும், சேதுபதி 22 ஓட்டங்களும், இப்திமெரிசா தனது விக்கட்டை இழக்காமல் 17 ஓட்டங்களும் பெற்றுர். இச்சந்தர்ப்பத்தில் யாழ். இந்துவின் எறிபந்து வீரர்களான சிவசத்தியசீலன் 34 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், சிவானந்தன் 53 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும். சச்சிதானந்தன் 9 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 1 விக்கட்டையும் வீழ்த்தினுர்கள்.

இதையடுத்து யாழ். இந்து வீரர்கள் தமது 2-வது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தார்கள். இதில் 7 விக்கட்டுகளை இழந்து மொத்தம் 114 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தர்மரத்தினம் 12 ஓட்டங்களும், பாலேந்திரன் 16 ஓட்டங்களும், சத்தியநாதன் 12 ஓட்டங்களும், அநேளானந்தம் 10 ஓட்டங்களும், சிவசத்தியசீலன் 28 ஓட்டங்களும், கந்தசாமி, சின்னராசா ஆகியோர் தங்கள் விக்கட்டை இழக்காமல் முறையே 10,23 ஓட்டங்களையும் பெற்றனர் இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணக்கல்லூரியின் எறிபந்து வீரர்களான ஞானச்சந்திரன் 45 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், பிரேமநேசன் 26 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டிமுடிவில் யாழ் இந்து யாழ்ப்பாணக்கல்லூரியை 3 விக்கட்டுகளாலும் 45 ஓட்டங்களாலும்வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது.

## யூகோஸ்லேவிய . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படுகின்றன.

எவ்வண்ணம் யூகோஸ்லாவியாவில் அமைப்பு விதிமுறைகள் சிருஷ்டிக்கப்பட்டுக் கையாளபபடுகின்றன என்பதற்குக் கீழ் சிறந்த உதாரணம் குறிக்கப்படுகின்றது.

பிரசைகள், பொதுசன விவாதங்கள், வாக்காளர் கூட்டங்களிலும் சுயநிர்ணய அரசுகளின் சங்கங்களிலும், சமூக-அரசியல் அமைப்புக்களிலும், தொழில்சம்பந்தப்பட்ட சங்கங்களிலும் பங்குபற்றுகிறுர்கள். அத்துடன் பிரசைகள் மாவட்ட அமைப்புக்களின் விதிமுறை பொருளடக்கத்திலும், அது சட்டமாக அமுலாக்குமுன்பு தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கவும், செல்வாக்கைப் பிரயோசிக்கவும்கூடிய நிலையிலுள்ளனர். இவ்வண்ணமாகப் பிரசைகள் இவ் விதிமுறைகள் தங்களது எனவும், தாங்களே ஐக்கியப்பட்டு உருவாக்கியது எனவும் தங்களது சொந்தச் சிரத்தைகளையும் கடமைகளையும் பிரதிபலிக்கின்றது எனவும் உணரக்கூடிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறே பொதுசன விவாதத்திற்குப் பின்பு மாவட்ட அமைப்பு விதிமுறைகள் தங்களது சொந்தச் சிருஷ்டி எனவும் அதுவே அவர்களது சுயநிர்ணய அரசின் உறுதிப்பத்திரம் பிரசைகள் அறியக்கூடியதாய் உள்ளனர். ஆகையால் பிரசைகளே மாவட்ட அமைப்புக்களின் கொள்கை நிர்ணயிப்புகளில் பெரும் பொறுப்பு ஏற்றுக்கொள்கின்றனர்.

கே. ரி. இராசசிங்கம்

## வரிவிளம்பரம்

ஊர்காவற்றுறையிலுள்ள தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கக் காரியாலயத்தில் F. R. 2 லிஸ்ரர் -18 கோஸ்பவரிலும் F. R. 1 லிஸ்ரர் - 9 கோஸ்பவரிலும் ஆன இரண்டு பாவித்த எஞ்சின்கள் விற்பனைக்கு உண்டு. அவைகளை விலை வைத்து வாங்க விரும்புவோர் இம் மாதம் 25-ம் திகதிவரை காலை 10 மணிமுதல் மாலை 3 மணி வரை பார்வையிடலாம் 1950

## மகளிர்மன்ற சிவராத்திரி விழா

பருத்தித்துறை, சனி

''வடமராட்சியில் இப்படியான முறையில் சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது இது தான்முதற்தடவையாகும். இது போன்று ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில் சிவராத்திரி விழாவைக் கொண்டாட வடமராட்சி மகளிர் மன்றத்தினர் ஒழுங்கு செய்ய வேண்டும் இவ்விழா சிறப்புற்றதற்கு இம்மன்றத்தின் தலைவி திருமதிஎஸ் ஸ்ரீபத்மநாதனை பாராட்ட வேண்டும்'' என்று புலோலி பசுபதீஸ்வர ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை பேசுகையில் கூறினுர்.

சிவராத்திரி விழா வடமராட்சி மகளின் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்றது.

விழாவில் திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரத்தின் இன்னிசை நிகழ்ச்சியும் 9-வயதுச் சிறுமி காஞ்சனு ஸ்ரீபத்மநாதனின் புல்லாங்குழல், சிறுமி ஜமுனு ஸ்ரீ பத்மநாதனின் வீணைக் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது.

திரு. உமாமகேஸ்வரனும் நிகழ்ச்சிகளைப் பாராட்டிப் பேசினுர். வேறு இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

☘ ☘ ☘

யாழ்ப்பாணம், ஞாயிறு

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோயிலில் நேற்று முன்தினம் இரவு மஹாசிவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விசேட பூசை, அபிஷேக ஆராதனை, நடைபஜனை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியவைகள் நடைபெற்றன.

மேற்படி கோயில் வீதியில் திரு. நா கேசைலிங்கத்தின் 'இளிக்காதே சிரி' என்ற முழுநீள நகைச்சுவை நாடகம் இடம்பெற்றது ஸ்ரீமதி கமலா கேசைலிங்கம் நாடகமும் ஆரம்பிப்பதற்கு முதல் ஆண்டறிக்கை வாசித்தார். நாடக முடிவில் திரு. எஸ். மணவைத்தம்பி உரைநிகழ்த்தினுர். சமுதாயத்திடையே முன்னேற்றம் காணப்பட வேண்டுமென்றும் கலப்புமணம் ஏற்பட வேண்டுமென்றும் அவர் பேச்சில் குறிப்பிட்டார்.

(ந. நி.)

---

## பயிற்சிபெற சென்றுள்ளார்

வவனியா, சனி

அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய நரம்புநோய் நிபுணர் திரு ஏ. சிற்றம்பலம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி நன்கொடைப் பணத்தில் மேலும் உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்றுள்ளார்.

அவர் அங்கிருந்து ஹொல்லாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் சென்று நரம்பு மனநோய் பற்றிப் பல ஆராய்ச்சிகள் மூலம் பயிற்சிபெறவிருக்கிறுர்.


## கதம்ப நிகழ்ச்சி

யாழ். திறந்தவெளி அரங்கில்

இம்மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 6-30 மணிக்கு இலங்கை கலாச்சார இலாகாவின் கீழ் ரஷ்ய கலாச்சார கோஷ்டியினரின்

### கதம்ப நிகழ்ச்சிகளும் சர்க்கசும்

நடைபெறும்.

(29 ஆண்களும் 6 பெண்களும் பங்குபற்றுவர்)

பிரவேசக் கட்டணம் ரூபா 5, 3, 2.

பிரவேசச் சீட்டுகள் கிடைக்குமிடம்: யாழ்ப்பாணம் கச்சேரி, டெயிலி நியூஸ் காரியாலயம், யாழ். காரியாதிகாரி கந்தோர், யாழ்: மாநகரசபை கந்தோர், வாசலிலும் கிடைக்கும்.

2014 —யாழ் பிரதேச கலைமன்றம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "சனசமூக நிலையங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இன்றைய கிராமங்களின் வளர்ச்சி பெரும்பாலும் சனசமூகநிலையங்களின் கையில்தான் தங்கியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலும் 400-க்கு மேற்பட்ட சனசமூகநிலையங்கள் இருந்து கலை, கலாச்சார துறைகளில் அரும்பணியாற்றி வருகின்றன. இவை இத்துறையுடன் மட்டும் நில்லாது பொருளாதார முன்னேற்றத்திலும் பங்குகொள்ளவேண்டிய ஒரு நிலை இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. நாட்டின் முன்னேற்றத்திற்கு தேவையான துறைகளிலெல்லாம் செயலாற்றி அத்துறைகளில் சனசமூக நிலையங்கள் தயங்காது முன்னின்று பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் நாடு வளர்ச்சியடையும் நாமும் வளர்ச்சியடையலாம்" என்று யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசத்துணைச்செயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் நேற்று முன்தினம் பாஷையூர் மக்கள் முன்னேற்றசங்க - சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கடற்தொழிலாளர் சங்க சமாச உபதலைவர் திரு. சிக்மறிங்க விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசுகையில், 'தேர்தல் காலங்களில் ஏற்படும் கட்சிப்போட்டிகள் இது போன்ற ஸ்தாபனங்களுக்குள் நுழைந்து ஸ்தாபனத்தை மட்டுமல்லாது நாட்டையே குட்டிச்சுவராக்கி விடுகின்றன. எனவே போட்டிப் பூசல்களை மறந்து நாட்டின் வளர்ச்சிக்காக இது போன்ற ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு செயலாற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

## பூமி மெதுவாக ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ததாயிருக்கும்.

நிறைகுறைந்த மண்டலம் தன்னை 24 மணிநேரத்திலும் பூமண்டலத்திலும் அடங்க அடங்கு பெரிதான சனி மண்டலம் தன்னை 10 மணி நேரத்திலும் சுற்றி வருவதைக்கொண்டேயறியலாம்.

இற்றைக்குச் சுமார் ஒரு வருட காலத்திற்குள் ரஷ்யா அமெரிக்கா ஆகிய வல்லரசு நாடுகளிலிருந்து வான வெளிக்குப் பலமுறை அநேகதோன் நிறையுள்ள பொருட்கள் அணுவிசையை ஆதாரமாகக் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனல் பூமண்டலத்தின் நிறை மிகச் சிறுபாகமேயானாலும் குறைந்து கொண்டு வருகின்றது.

அப்படிக் குறைவதனுல் பூமண்டலம் தன்னைத்தான் சுற்றுகின்ற வேகத்தில் விநாடிக்கணக்கேயாயினும் குறைவுபட்டுக் கொண்டே வரும்.

ஆதியில் பூமண்டலத்தின் நிறைக்கேற்ப 24 மணித்தியாலம் அல்லது 60 நாழிகையில் தன்னைச் சுற்றும் என்ற கணக்கை ஆதாரமாகக் கொண்டுள்ள கதை சாத்திர நியதி பிழைபடும். எனவே சகல சோதிட கணிதங்களும் வித்தியாசமெய்தும்.

## நாடோடிப்பாடல்கள் பற்றி எப். எக்ஸ். ஸி.

கொழும்பு, சனி

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய மேல் வகுப்பு மாணவமன்றத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா 'நாட்டுப்பாடல்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர்.

கூட்டத்துக்குத் திரு. ஷண்முககுமரேசன் தலைமை வகித்தார்.

வித்துவான் நடராசா பேசுகையில் தாலாட்டு, ஒப்பாரி, தோணிப்பாட்டு முதலியபல நாடோடிப்பாடல்கள் இலங்கையில் உண்டு என்று சிறப்பாக மட்டக்களப்பில் வழக்கில் இருக்கின்றனவென்றும் கூறினுர். திரு. ஷண்முக குமரேசன் பேசுகையில், அந்நாளில் உலக்கை போடும் பொழுது வள்ளைப்பாட்டுப் பாடினுர்கள். நம்முன்னுேர் பலவேலைகள் செய்யும் பொழுதும் பாடிமகிழ்ந்தார்கள் என்று கூறினுர்,

## தேவை

தென்னந்தோட்டமொன்றிலும் பாற்பண்ணையொன்றிலும் வேலை பார்ப்பதற்கு அனுபவம்மிக்க ஒருவர் தேவை. குடும்பஸ்தர் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு: திருமதி அருணுசலம், ஆலாத்திவெளி தோட்டம், நாவற்குழி. 1951

## "நாட்டை வளப்படுத்துவோம்"

வவனியா, சனி

இலங்கை சுதந்திரம் அடைந்து 18 ஆண்டுகளாகியும் இலங்கைவாழ் தமிழ் பேசும்மக்கள் அச்சுதந்திரத்தை இதுவரை காலமும் அநுபவிக்க முடியாமலிருந்தனர். ஆனுல் இன்று நாம் பெருமைப்படும் நிலையில் இருக்கிருேம் என்று வவுனியா திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் வவனியா நகரசபைத் தலைவர் திரு ம. பொன்னையா பேசுகையில் கூறினுர்.

"ஒருநாட்டின் சுதந்திரம், அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொதுச்சொத்தாகும். ஆனுல் எம் நாட்டில் தமிழர் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கருதப்பட்டு வந்தனர். இதற்கு எமது முன்னைய அரசாங்கக் கட்சியினரின் பாரபட்சமான போக்கும், வகுப்புத் துவேஷங்களைப் பிரசாரம் செய்யும் விஷமிகளின் செயலுமே காரணம்" என்றும் அவர் கூறினுர்.

இன்றைய அரசாங்கம் தமிழ்மக்களையும் நீதியின்படி நடத்துகிறது. நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதற்கு அரசாங்கம் சகலரையும் ஊக்கப்படுத்தவேண்டுமென்றும் அவர் கூறினுர்.

## ஹங்கேரியில் மதத்தலைவர் கைது

புடாபேஸ்ட், பெப். 19

ஹங்கேரியில் அரசாங்கத்தை வீழ்த்தச் சதிசெய்ததாக ஒரு தொகையானேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும், ரோமன் கத்தோலிக்க குருமார்கள் இதில் அடங்குவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதே சமயம் போலந்தில் கருதினல் விஷின்ஸ்கி உட்பட பல திருச்சபைத் தலைவர்களின் நடவடிக்கை மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## பிரேத அடக்கத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

20-ம் திகதி இரவு ஒன்பது மணியளவில் எனது காரியாலயத்தில் இருந்தேன். அச்சமயம் லோரன்ஸ்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை என்பவர் வந்து இளவாலை கோயிலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு துருமபன் தனது மனவியை அடித்துக் கொலைசெய்துவிட்டான், பிரேதம் கடலைக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் நடைபெறுகிறது என்று கூறினுர் நான், பஸ்தியாம்பிள்ளையை முறைப்பாடு தரும்படி கூறினேன். அதற்கு அவர் தான் அவசரமாகச் செல்வதாகவும் பிறகு வந்து முறைப்பாடு தருவதாகவும் கூறினுர் பஸ்தியாம்பிள்ளை துருமபன் என்று கூறியபோது எதிரியைத்தான் குறிப்பிடுகிருர் என்று தெரியும். துருமபன் என்பது சலவைத்தொழிலாளியைக் குறிக்கும். நான் உடனே எதிரியின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு ஒரு பெண்ணின் பிரேதம் இருந்தது நான் எதிரியிடம் இறந்தவரின் மரணம் சம்பந்தமாக சந்தேகம் எழுந்திருப்பதால் பொலிஸார் வரும் வரை பிரேதத்தை எடுக்கவேண்டாம என்று கூறி எனது காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கு சங்கானைப் பொலிஸ் சார்சனிடம் சம்பவத்தைக்கூறி அவரை எதிரியின் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுவந்து சாட்சியங்களைப் பதிவுசெய்தேன். அதன்பின் பிரேதத்தை பொலிசாரிடம் பாரம் கொடுத்தேன்."

லோரன்ஸ்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை சாட்சிய மளிக்கையில் கூறியதாவது "என்னிடம் பேதுருருேக்கு என்பவர் வந்து தனது சலவைத்தொழிளாளி அவரின் மனைவியை அடித்துக் கொலை செய்துவிட்டதாகவும் பிரேத அடக்கத்திற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் என்னைப்போய் விதானையிடம் கூறும்படியும் கூறினுர் நான் அவரிடம் அடித்ததைக் கண்டீரா என்று கேட்டதற்கு, அவர் தான் காணவில்லையென்றும் பிலிப் என்பவர் பிரேதம் அடக்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிருர் என்றும் கூறினுர். நான் விதானையிடம் இரண்டு தடவை சென்றேன். அவர் இல்லை. மூன்ரும் தடவை சென்று அவரிடம் கூறினேன்."

ஜெருசலம்சிங்கராசா என்பவா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:— 'சென்ற வருடம் அக்டோபர் மாதம் இருபதாம்திகதி அதிகாலை நாலரை மணியளவில் எதிரி வந்து தனது மனைவிக்குச்சுகமில்லையென்றும் என்னைப் போய் ஆயுள்வேத வைத்தியர் அல்போன்சோவைக் கூட்டிக்கொண்டு வரும்படியும் கூறினுர். நான் எனக்குச் சைக்கிள்ஓடத் தெரியாதென்று வேறு யாரையும் அனுப்பும்படி கூறினேன் அவர் போய்விட்டு அரை மணித்தியாலம்கழித்து வந்து மனைவி இறந்துவிட்டதாகவும் சவிரி பிலிப்பிடம் சென்று மனைவிஇறந்ததைப் பற்றி அறிவிக்கும்படியும் கூறினுர். நான் அவரிடம் ஏன் இறந்தாரென்று கேட்கவில்லை. அவரும் என்ன நோயால் இறந்தா என்று கூறவில்லை

நீதிபதிமேல்விசாரணையை இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஒலிம்பிக் வெற்றி

வவனியா, சனி

வவனியா பொழுதுபோக்குக் கழகத்தால் வவனியா உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையே நடைபெற்று [illegible] வெற்றிக்கேடயப் போட்டியில் வவனியா ஒலிம்பிக்கோஷ்டிக்கும் சிங்கள மகாவித்தியாலய கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஒலிம்பிக் 1-0 கோலால் வித்தியாலயக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

மத்தியஸ்தராக திரு. ரி. கே. சில்வராசா கடமையாற்றினுர்.

# உருளைக்கிழங்கு உற்பத்தி வவனியாவில் அதிகரிப்பு

வவனியா, சனி

வவனியாவில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு நல்ல பலனை அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம். விவசாயப்பகுதியினரதும் விவசாயிகளினதும் ஒத்துழைப்புத்தான் இப்படியான விளைச்சலுக்குக் காரணமாகும்" என்று நேற்றுப் பிற்பகல் வவனியாவில் நடைபெற்ற உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் உருளைக்கிழங்கு கொள்முதல் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவனியா அரசாங்க அதிபர் திரு. தஸநாயக்கா உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் விவசாயிகள் குறைந்தது அரை ஏக்கர்வீதம் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்தால் தங்களின் சுயதேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும என்றும் நாட்டின் உற்பத்தியையும் பெருக்கி வருவதாகவிருக்கும் என்றும் கூறினுர்.

இவ்விழா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு எஸ். நடேசன் தலைமையில் நடபெற்றது. இவ்விழாவில் திரு. வி. நடராசா, திரு. வி. நாகரத்தினம் உட்பட பலர் பேசினர்.

# ராக் அன்ட் பீல்ட் விளையாட்டு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ராக் அன்ட் பீல்ட் கோஷ்டிக்கும் கொழும்பு ராக் அன்ட் பீல்ட கோஷ்டிக்குமிடையேயான விளையாட்டுப்போட்டி நேற்று யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெற்றது பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கலந்துகொண்டார்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

### ஆண்கள்

100 மீட்டர் (60.8 செக்): கே. எஸ். செனரத்ன (கொழும்பு), என். கணேசரத்தினம் (யாழ்ப்பாணம்), என். மகேந்திரன் (யாழ்)

200 மீட்டர் (23 0 செக்): லக்ஸ்மன் டீ அல்விஸ் (கொ), கொடிதுவக்கா (கொ), ஈவர்மகுலசூரியா (கொ).

800 மீட்டர் (2நி 1.9 செக்): லயனல் பஸ்டுவல் (கொ), ஆர். ஏ. சந்திரதாசா (கொ), வி. தில்லையம்பலம் (யா).

400 மீட்டர் (51.9 செக்): கொடிதுவாக்கா (கொ), கே. எஸ். செனரத்ன (கொ), குணராசா (யா)

1500 மீட்டர் (4 நி. 16.9 செக்): எம் ஆர். விஜயபண்டாரா (கொ), ஆர். ஏ. சந்திரதாசா (கொ), எஸ். என். ராஜரத்தினம்

5000 மீட்டர் (17 நி. 22.04 செக்): விஜயபண்டாரா (கொ), பி. எம், சுமணசேன (கொ), ஏ. ஸி. ரத்னசோதி (யா).

நீளப்பாய்தல் (22 அடி) ஆர். கே, எல். கருணசேன (கொ), எஸ். ஏ. பெனடிக்ற் (யா), வி. ரி. மகாலிங்கம் (யா)

உயரப்பாய்தல் (6 அடி): மகேந்திரன் (யா), வி. ரி. மகாலிங்கம் (யா)

தடியூன்றிப பாய்தல் (10 அடி 11 அங்): சிறிதரன் (யா), என். கணேசானந்தன் (யா), ரவீந்திரகுமார் (கொ).

கெந்திப் பாய்தல்: எஸ். ஏ பெனடிக்ற் (யா) ஆர். கே. ஸி. கருணசேன (கொ), ஏ. எஸ் இமானுவல் (யா)

குண்டெறிதல் (36 அடி 10 அங்): எம். ஏ. தியாகராசா (யா), பியதாசா பெர்ணுண்டோ (கொ) கே. ஸி. சேவியர் (யா).

பரிவட்டம் எறிதல் (119 அடி 2 அங்): பியதாசா பெர்ணுண்டோ (கொ), ஏ. ஸி. ரி. கிருஷ்ணதாசா (யா), எம். ஏ. தியாகராசா (யா),

ஜவலின் எறிதல் (180 அடி 3 அங்): பியதாசா பெர்ணுண்டோ (கொ), ஏ. எஸ். பனுவல் (யாழ்) எம். பவுசர் (யா)

110 மீட்டர் தடையோட்டம் (16.1 செக்): எம். கணேசானந்தம் (யா) என். திசநாயக்கா (கொ), என். மகேந்திரன்.

400 மீட்டர்தடையோட்டம் (60. 8 செக்): கே. எஸ். செனரத்ன (கொ), என். கணேசானந்தம் (யா), ஏ. மகேந்திரன் (யா)

### பெண்கள்

100 மீட்டர் (13 8 செக்): சில்வியா பெர்ணண்டோ (கொ), மாலிகா ஜெயமான (கொ), ரூபி அழகையா (யாழ்).

200 மீட்டர் (28.2 செக்): சில்வியா பெர்ணண்டோ (கொ), மாலிகா ஜெயமான (கொ), ரூபி அழகையா (யாழ்).

நீளம்பாய்தல் (14 அடி 11 1/4 அங்) ரி. சலவோத (கொ), அயரின் டி' சில்வா (கொ), என். ஜெயவர்த்தன (கொ).

உயரம்பாய்தல் (4 அடி 8 3/4 அங்) கே. செல்வலக்ஷ்மி (யா), என். ஜெயவர்த்தன (கொ).

குண்டெறிதல் (27 அடி 11 அங்): சின்ரா பெருவல (கொ) எம். எஸ். யோசப் (யா) எஸ். நிக்கலஸ் (யா).

(79 அடி 0.5 அங்) சின்ரா பெடோலா (கொ) சி. பரமேஸ்வரி (யா) ஏ. ஜெயமலர் (யாழ்). (ந நி)

## மாணவருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம, சனி

"மற்றவர்களைத் திருத்துவதற்கு முன்னர் நீ உன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும், நீர் பல்கலைக் கழகத்தில் பிரவேசித்தால் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். நீர் அங்கு சென்ற பின்னரும் இவ்விதம் நடந்துகொண்டீரானுல் நீர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்படும்" என்று பல்கலைக்கழக பிரவேச வகுப்பில் பயின்றுகொண்டிருந்த மாணவர் ஒருவர் இன்னெருவரின் மனைவிக்கு கல்லால் எறிந்து காயம் விளைவித்தாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மாணவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் மாணவரைப் பார்த்து எச்சரித்தார்.

சரவணை மேற்கைச் சேர்ந்த சுப்பையாவின் மனைவி யோகேஸ்வரிக்கு கல்லால் எறிந்து காயம் விளைவித்ததாக என். தவச்செல்வம் என்ற மாணவர் மீது வழக்குத்தொடரப்பட்டிருந்தது.

ஊர்காவற்றுறைப் பொலிசார் வழக்கை நடத்தினுர்கள். எதிர்தரப்பில் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன், திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானுர். (ந.நி)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org